பக்கங்கள் 20+ 03

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 08 ஞாயிற்றுக்கிழமை 22.06.2024 | அதிர்வு 323

## செம்மணியில் ‘அணையா விளக்கு’

### போராட்டத்தில் பங்கேற்க தமிழரசு உறுப்பினர்களுக்கு தலைவர் சி.வி.கே. அழைப்பு



“யாழ். செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி ஆய்வு தொடர்பாக உண்மை கண்டறி 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் யாழ்., திருகோணமலைக்கு விஜயம்

## எம்.பிக்களை யாழ்ப்பாணத்தில் சந்திப்பார்

நாளை திங்கட்கிழமை கொழும்புக்கு வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் 25ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் நேரடியாக விஜயம் செய்வார் என்று தெரிகின்றது.

தாம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் போது அங்கு களச்சூழ்நிலை ஒழுங்காக இருக்குமானால் அவர் செம்மணி மனிதப் புதைக்குழி இருக்கும் பகுதிகளையும் நேரடியாகப் பார்வையிடுவார் எனத் தெரிகின்றது. 02

# செம்மணி மனிதப் புதைகுழிக்குச் செல்வதற்கு ஐ.நா. ஆணையருக்கு அரசு தடையற்ற அனுமதி

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், யாழ். செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதற்குத் தடையற்ற அனுமதி வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியில் விஜயம் 03

செம்மணி 'அணையா விளக்கு' போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில்



# மட்டக்களப்பில் நாளை மாபெரும் போராட்டம்

## கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு சாணக்கியன் எம்.பி. அழைப்பு

"யாழ். செம்மணியில் நாளை திங்கட்கிழமை முதல் 3 தினங்களுக்குத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ள 'அணையா விளக்கு' போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நாளை மட்டக்களப்பில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றேன்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மட்டக்களப்பு, ஓந்தாச்சிமடம் – கோட்டைக்கல்லாறு பாலத்துக்கு அருகாமையில் நாளை திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு தீப்பந்தங்கள் ஏந்தி இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதில் எங்களுடைய கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்து தமிழ் உறவுகளும் அனைத்து உணர்வாளர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று பகிரங்கமாக அழைப்பை விடுக்கின்றோம்.

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி 'அணையா விளக்கு' போராட்டம் யாழ்ப்பாணத்தில் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக – அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் மட்டக்களப்பில் இந்த மாபெரும் போராட்டத்தை நாங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

அந்தவகையில் கட்சி பேதங்கள் இன்றி எங்களுடைய அனைத்து தமிழ் உணர்வாளர்களும் கலந்துகொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றேன்." – என்றார்.

# யாழில் லிப்ட் விபத்தில் இளைஞர் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணத்தில் லிப்ட் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். நகர் பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றின் பணியாளரான டிலக்சன் (வயது 20) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை விடுதியில் பணியில் இருந்தபோது, மேல் தளத்துக்குச் செல்வதற்காக லிப்டில் ஏறிய போது, லிப்டினுள் இடம்பெற்ற விபத்தில் அவர் படுகாயமடைந்தார்.

அதனையடுத்து அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க இருக்கின்றார் எனவும் கூறப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் பங்குபற்றுவர் எனத் தெரிகின்றது. ஏனைய எம்.பிக்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கின்றதா என்பதை அறியமுடியவில்லை. அவர்களும் அழைக்கப்படக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

நாளை கொழும்பு வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாளை மாலை நாடாளுமன்றக் குழு அறையில் நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்களை ஒன்றாகச் சந்திக்கின்றார். எனினும், எதிர்க்கட்சிப் பிரமுகர்களைத் தனித்தனியாக அவர் சந்திக்கும் வாய்ப்புகள் குறைவு என்று கூறப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வரும் அதே சமயத்தையொட்டி இலங்கையின் பிரதமர் ஹரிணி அமரசூரிய கனடாவில் ஒரு நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக அங்கு பயணமாகின்றார் எனவும் கூறப்படுகின்றது. அதனால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கொழும்பில் வந்து இறங்கிய கையோடு பிரதமருக்கும் அவருக்கும் இடையில் சந்திப்பு நடப்பதற்கு வாய்ப்பு இருந்தால் மட்டுமே அந்தச் சந்திப்பு இடம்பெறும் எனக் கூறப்பட்டது.

ஆயினும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்துப் பேசுவார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் நிகழ்ச்சி நிரல் பற்றிய விடயம் இன்னமும் முழுமையாக வெளிவரவில்லை. பெரும்பாலும் இன்று மாலைக்கு பின்னர் அது உறுதியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதற்கும், மக்களைச் சந்திப்பதற்கும் தடையற்ற அனுமதி வழங்கப்படும்.

கடந்த கால மனித உரிமை மீறல்களைக் கையாள்வது குறித்தும், நாட்டின் நல்லிணக்கத்துக்கான தனது அர்ப்பணிப்பு குறித்த நேர்மையை வெளிப்படுத்துவதற்கும் அரசு விரும்புவதால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மக்களைச் சந்திப்பதற்கும், அனைத்து இடங்களுக்குச் செல்வதற்கும் எந்தத் தடையையும் விதிக்கப் போவதில்லை." – என்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவர் ஒன்பது வருடங்களின் பின்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக 2016 ஆம் ஆண்டு பெப்ரவரியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி வகித்த வேளை செயித் ராத் அல் ஹுசைன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

சர்வதேச சமூகத்தால் முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை கரிசனைகளை எவ்வாறு கையாள்வது எனத் தெரியாமல் அநுர அரசு தடுமாறிக்கொண்டிருக்கின்ற நிலையில் ஆஸ்திரேலியப் பிரஜையான வோல்கர் டர்க் நாளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

### போராட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டு சர்வதேச நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என 'மக்கள் செயல்' என்ற தன்னார்வ இளையோர் அமைப்பு ஏற்பாடு செய்திருக்கும் 'அணையா விளக்கு' மூன்று நாள் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கும் முகமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் யாவரும் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 9.30 முதல் பிற்பகல் 1.30 மணி வரை கலந்துகொண்டு எமது கட்சியின் ஆதரவைத் தெரிவிக்க வேண்டும்எனக்கேட்டுக்கொள்கின்றோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை விஜயத்தின் போது நாம் ஒற்றுமையாக செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதிக்கான கோரிக்கையையும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியையும் வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்பது மிக முக்கியமானது."

– என்றும் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் மேலும் தெரிவித்துள்ளார்.



# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று சனிக்கிழமை அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் திருக்கோவில் தவிர்ந்த பொத்துவில், ஆலையடிவேம்பு, காரைதீவு, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய 5 சபைகளின் 24 உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர்கள் நால்வரும் தனியாக ஓரறைக்குள் அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடைபெற்றது.

எனினும், தவிசாளர் தொடர்பாக இன்னும் உறுதியான தீர்மானம் எட்டப்படவில்லை என்று தெரியவருகின்றது.













**வவுனியாவில் 18 மணித்தியாலங்களுக்கு மேலாக நீர் விநியோகம் தடை:**

# மாநகர சபை உறுப்பினரின் முன்மாதிரியான செயற்பாடு

**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாநகர சபை உறுப்பினர் ஒருவர் 18 மணித்தியாலங்களுக்கு மேலாக நீர் விநியோகம் தடைப்பட்டிருந்த பகுதிகளில் தனது சொந்த நிதியில் வாகனத்தைக் கூலிக்கு அமர்த்தி நீர் விநியோகம் மேற்கொண்ட சம்பவம் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. வவுனியா மாநகர சபையின் பண்டா ரிக்குள வட்டார உறுப்பினரான சி.பிறேம தாஸ் (கடவுள்) என்பவராலேயே இந்த வேலைத்திட்டம் இன்று மேற்கொளெளப்பட்டது.

வவுனியா நகரின் சில பகுதிகள், மன்னார் வீதி, குருமன்காடு, நகரசபை விடுதி, அரச விடுதிப் பகுதி உளளிட்ட சில பகுதிகளில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பால் வழங்கப்படும் நீர் விநியோகத்தில் தடை ஏற்பட்டு சுமார் 18 மணித்தியாலங்களுக்கு மேலாக நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது. இதனால் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், அரச விடுதிகள், வீடுகள் என்பவற்றில் தமது அன்றாடச் செயற்பாடுகளுக்கு நீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், வேறு இடங்களுக்குச் சென்று கலன்களில் நீரை எடுத்து வருவதையும் அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில், வவுனியா மாநகர சபை உறுப்பினர் சி.பிறேமதாஸ் நீர்த் தாங்கி வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள மக்களது வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குத் தானே நீரை எடுத்துக் கொடுத்து மக்களது அவசர நீர்த்தேவையைப் பூர்த்தி செய்துள்ளார். இவரது முன்மாதிரியான செயற்பாடு மக்களது பாராட்டைப் பெற்றுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர் விநியோகக் குழாயில் வெடிப்பு ஏற்பட்டது எனவும், குறித்த வெடிப்பு ரயில் தண்டவாளத்துக்குக் கீழ் உள்ள குழாயில் ஏற்பட்டுள்ளதால் ரயில் திணைக்கள அதிகாரிகள் வருகை தந்த பின்னரே அதனைச் சீர்செய்ய முடியும் என்பதாலேயே தாமத நிலை ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.









# உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற பெண்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பெண்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று இடம்பெற்றது.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தில் ஏற்பாட்டில் இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வட்டாரங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 15 பெண்கள் கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன், யாழ். மாநகர சபை மேயர் மதிவதனி விவேகானந்த ராசா, வட்டாரங்களில் வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகளின் பெண் உறுப்பினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது யாழ். பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை தலைவர் கோசலை மதன் சிறப்புரையாற்றினார்.














# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மிகுந்த அவதானம் தேவை

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் மக்கள் செயல் என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் நாளை 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையில் செம்மணி வளைவுப் பகுதியில் 'அணையாவிளக்கு' எனும் வெகுசனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையா விளக்கை முன்னிலைப்படுத்தியே இந்தப் போராட்டம் ஏற்பாட்டாளர்களால் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருள் சூழ்ந்திருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்துக்கு ஒளி பாய்ச்சப்படல் வேண்டும் என்கின்ற குறியீட்டு அர்த்தத்தில் இந்தப் போராட்டத்தில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் எரியக்கூடிய அணையா விளக்கு ஏற்றப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் தமிழர் தேசம் ஒன்று திரண்டு திரட்சியாகப் பங்கு பற்றும் சூழ்நிலை உருவாகி வருகின்றது. அதே சமயத்தில் இந்தப் போராட்டத்தை ஒழுங்கு முறையோடும், கட்டுப்பாட்டோடும், உலகத்தின் கண்களைத் திறக்கும் வகையில் நேர்மைத் திறனுடனும் முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு ஏற்பாட்டாளர்களுக்கு ஒரு பொறுப்பாக இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நாளை இலங்கை வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இந்தப் புதைகுழிப் பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமையை பார்வையிடும் வாய்ப்புக் கிட்டி இருக்கிறது.

அதற்கான முழு ஒழுங்குபடுத்தலையும் செய்து தருவோம் என்று அரசாங்கமும் அறிவித்திருக்கிறது.

ஆனால் செம்மணிப் பிரதேசத்தை பார்வையிடுவதற்கான களச்சூழல் இருந்தால் மட்டுமே அங்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் விஜயம் செய்வார் என்று அவரின் அலுவலகத்தின் சார்பில் இந்த விடயங்களை கையாளும் தரப்புகள் தெரிவிக்கின்றன.

ஆகையினால் ஆர்வக்கோளாறு காரணமாக எல்லை மீறி, ஒழுங்கு கடந்து செயற்பட்டு, வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழியை உடைத்த கதையான வேலையைச் செய்து விடக்கூடாது.

செம்மணிப் புதைகுழி விவகாரம் தனக்கு எதிராக - தன் படைகளுக்கு எதிராக - திரும்பக் கூடிய ஆபத்து இருப்பதை உணர்ந்துள்ள பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு அத்தகைய பிரதேசங்களை நேரடியாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பார்வையிடப் போகும்போது, விவகாரத்தை தமிழ் மக்களின் தலை மீது போட்டுக் குழப்பி அடிக்க வஞ்சகத் திட்டம் வகுக்கக்கூடும். அவற்றுக்குப் பலியாகாமல் இந்தப் போராட்ட நிகழ்வை கட்டுக்கோப்புடனும் ஒழுங்குடனும் நாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

செம்மணிப் புதைகுழி போன்ற விவகாரங்கள் ஏற்கனவே யுத்தப் பேரழிவினால் நலிவுற்று ஆதங்கத்தில் மூழ்கி இருக்கும் தமிழர் சமுதாயத்தை இலகுவாக உணர்ச்சியைத் தூண்டக்கூடிய விடயங்களாகும். அதனைப் பயன்படுத்தி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அங்கு வருவதை குழப்புவதற்கும் அல்லது வரும் சமயத்தில் குழப்பங்களை ஏற்படுத்தி அதற்கான குற்றச்சாட்டுக்களை தமிழ்ப் போராட்டத் தரப்புகள் மீது சுமத்துவதற்கும் சதித்திட்டங்கள் வகுக்கப்படலாம்.

ஆகையால் 'அணையா விளக்கு' போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் சமூகத்துக்கு பதில் கூறக்கூடியவர்களாக, கடும் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்கு முறையுடனும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்த வேண்டும். இல்லாவிட்டால் கைக்கு கிடைத்த வாய்ப்பைக் கோட்டை விட்டவர்களாகிவிடுவோம்.



# கதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேகத்துக்கு அழைப்பு

கொழும்பு – 11 ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத்துக்கான அழைப்பிதழை சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவஸ்ரீ பாபுசர்மா மற்றும் பீட இணைப்பாளர் சிவநேசன் சர்மா மற்றும் ஆலய அறங்காவலர் சபையினர் சார்பாக வீரசுப்ரமணியம் ஆனந்தரூபன் ஆகியோர் வெளிவிவகார அமைச்சில் அமைச்சர் அலுவலகத்தில் சந்தித்து வழங்கி பிரசாதமாக பழ தட்டு கொடுத்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.



# குறைந்த செலவிலான வலுசக்தி உற்பத்தி செயற்றிட்டத்துக்கு 150 மில்லியன் டொலர்!

## ஒப்புதல் அளித்தது உலக வங்கிக் குழுமம்

இலங்கையில் தூய, தரமான, குறைந்த செலவிலான வலுசக்தி உற்பத்தி செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்காக 150 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவதற்கு உலக வங்கிக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக இலங்கையால் குறைந்த செலவில் பாதுகாப்பானதும், நிலைபேறானதுமான வலுசக்தியை உற்பத்தி செய்ய முடியும் எனவும், இது அதிக செலவில் இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருளில் நாடு தங்கியிருப்பதைக் குறைப்பதற்கும், சோலார் மற்றும் காற்று மூலமான வலுசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உதவும் எனவும் உலக வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் உள்ள குடும்பங்களுக்கும் வணிகங்களுக்கும் குறைந்த விலையில், தீங்கற்ற மின்சாரத்தை விநியோகிக்க முடியும்.

இந்த இலக்கை யதார்த்த பூர்வமாக அடைந்துகொள்வதை முன்னிறுத்தி இலங்கை அரசுடனும் தனியார் துறையினருடனும் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் டேவிட் சிஸ்லென் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வலுசக்தி உற்பத்தியில் இலங்கை அடையவிருக்கும் நிலைமாற்றமானது தூய வலுசக்தி உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கும், வலுசக்தி கிடைப்பனவை மேம்படுத்துவதற்கும், நீண்டகால அடிப்படையிலான வலுசக்தி மீளெழுச்சியைக் கட்டியெழுப்புவதற்கும் வாய்ப்பாக அமையும் என்று சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் இமாத் என் ஃபகோரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



# கணபதிபுர மாணவருக்கு கற்றலுக்கான உதவிகள் வழங்கிய ஒஸ்கார் அமைப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம் ( ஒஸ்கார்) சம்மாந்துறை வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலய முதலாம் ஆண்டு மாண வர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகர ணங்களையும், பாதணிகளையும் வழங்கி வைத்தது.

ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வழிநடத்தலில், பொருளாளர் வீ.விவேகானந்தமூர்த்தி யின் வேண்டுகோளுக்கு அமைவாக, ஒஸ்கார் அமைப்பின் போசகர் பொறி யியலாளர் வே.சிவசுப்பிரமணியம் இந்தத் திட்டத்துக்குப் பூரண நிதியுதவி நல்கினார்.

இந்த நிகழ்வு, மல்வத்தை கணபதி புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபர் எஸ்.கிருபைராஜா தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக, ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளரும் ஊடக வியலாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்து கொண்டார்.

சிறப்பதிதிகளாக ஒஸ்கார் பிரதிநிதி களான ஆசிரியர் ஆர்.இரத்தினகுமார், சமூக செயற்பாட்டாளர் ஏ.ஆனந்தசசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒஸ்கார் சார்பில் ஏ.ஆனந்தசசு மற்றும் ஆ.கவிஸ்சரண் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

நிகழ்வில் அனைத்து மாணவர்க ளுக்கும் சப்பாத்து பாடசாலை பை உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங் கப்பட்டன.

ஏலவே பாடசாலையின் நீண்ட காலத் தேவையாக இருந்துவந்த ஒலி பெருக்கி சாதனத்தையும் ஒஸ்கார் அமைப்பு வழங்கி வைத்தது.





நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர் கள் பெற்றோர்கள் கலந்து கொண்ட னர்.

ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையிலான செயலாளர் தி.லாவண்யன், பொரு லாளர் வீ.விவேகானந்தமூர்த்தி உள் ளிட்ட ஒஸ்கார் குழுவினர் இன் னொரன்ன பல சேவைகளை காரை தீவில் மட்டுமல்லாமல் அம்பாறை மாவட்ட தமிழ் கிராமங்களில் கடந்த பல வருடங்களாக செய்து வருகின்ற னர்.

இந்த வருடம் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் பெருமளவான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க இருப்பதாக ஒஸ்கார் தெரிவித்துள் ளது.





# தனுஷ்கோடி கரையில் கண்டுபிடிக்கப்பட்ட நெடுந்தீவுப் படகு குறித்து இங்கு குழப்பம்!

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் தனுஷ்கோடியில் கரை ஒதுங்கிய இலங்கைப் படகு ஒன்றினால் யாழ்ப்பாணத்தில் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தியாவின் தனுஷ்கோடியை அண்மித்த கடற்பரப்பில் தரையில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் கடலில் ஓர் இலங்கைப் படகு நிற்பதை இந்திய மீனவர்கள் அவதானித்து படகை கரைக்கு இழுத்துச் சென்று பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். கரைக்கு இழுத்துச் சென்ற படகை கைப்பற்றிய தமிழகப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கைப்பற்றிய படகில் OFRP-A-5424 JFN என இலக்கம் காணப்படுகின்றது. இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட படகு என்பதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் தேடுதல் மேற்கொண்ட சமயம் இந்த இலக்கம் யாழ்ப்பாணம் நெடுந்தீவில் ஒரு வருக்கு வழங்கியதற்கான பதிவின் அடிப்படையில் பரிசோனை மேற்கொண்டபோது பதிவுப் பத்தகத்தின் அடிப்படையில் பெயர் குறிந்த நெடுந்தீவு மீனவரின் அந்தப் படகு நெடுந்தீவில் இன்றும் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

அவ்வாறாயின் இந்தியாவில் பிடிபட்ட படகு திருட்டு இலக்கத்தில் உள்ள படகு எனக் கருதப்பட்ட வேளையில் ஊர்காவற்றுறை நெருஞ்சிமுனையைச் சேர்ந்த மற்றொரு மீனவர் அந்த இலக்கப்படகு தன்னுடையது எனவும், ஊர்காவற்றுறையில் நிறுத்தி வைத்திருந்த சமயம் அதைவக் காணவில்லை எனவும் இன்று ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

ஒரே இலக்கத்தில் இரண்டு படகுகளின் பதிவுகள் வந்தமை எங்ஙனம், அதில் ஒன்று தனுஷ்கோடியில் கரை ஒதுங்கியது எப்படி என்று

மர்மம் விளங்காது யாழ்ப்பாணத்தில் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் குழப்பம் நிலவுகின்றது.






# யாழில் பல்வேறு குற்றச் செயல்களை புரிந்த மூவர் தலைமன்னாரில் கைது!

## இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்றவேளை

யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச் செயல்கள் புரிந்த மூவர் நேற்று சனிக் கிழமை (22) தலைமன்னார் கடற் பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட் டனர்.

கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த இந்த மூவரும் யாழ்ப்பாணம், கோப் பாய், பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, வாள்வெட்டு ஆகிய குற்றச் செயல்களுடன் தொடர்பு டையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூவரும் இலங்கை – தலை மன்னாரில் இருந்து கடல் மார்க்கமாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயற் சித்தவேளை கடலில் வைத்து கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள னர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளைத் தலை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் பொலிஸார் இரண்டு பேர் கைது!

அம்பாறை நகரில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் போக்குவரத்தை எவ்வித இடையூறுமின்றி மேற்கொள்வதற்கு அம்பாறையைச் சேர்ந்த வர்த்தக ரொருவரிடம் 25 ஆயிரம் ரூபாயை லஞ்சமாகப் பெற்றமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குறித்த இருவரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அம்பாறை வலய குற்ற விசாரணை பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட்கள் இருவரே கைதாகியுள்ளனர்.

இந்த நிலையில், சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

# பொது மன்னிப்பைச் சட்டவிரோதமாக பயன்படுத்தி 30 கைதிகள் விடுவிப்பு!

## குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை

எந்தவித ஆவணங்களும் இல்லா மல் 30 கைதிகள் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருப்பது, குற்றப் புலனாய் வுத் திணைக்களம் நடத்திய விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் பொது மன்னிப் பைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி சிறைக் கைதிகளை விடுவிப்பது தொடர் பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணையை ஆரம்பித் தது.

இந்தநிலையில், சிறைச்சாலைகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் பல்வேறு பிரிவுகளின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் எந்த அடிப்படையில் விடுவிக் கப்பட்டனர் என்பதையும் விசாரித்து வருவதாக விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், பொது மன்னிப்பை வழங் கிய 37 பேர் விடுவிக்கப்படவில்லை என்ற தகவல்களும் கிடைத்துள்ளன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச் சர் ஆனந்த விஜேபால நாடாளு மன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கிடையில், சிறைச்சாலைத் திணைக்களத்தின் விரிவான மறு சீரமைப்பு குறித்து நீதி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதுடன் அனைத்து சிறைச்சாலை கண்காணிப்பாளர்களும் வரும் நாளை திங்கட்கிழமை கொழும் புக்கு வரவழைக்கப்பட்டு, இந்த விடயத் துக்குப் பொறுப்பான அமைச்சரின் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பிற்பகல் சிறைச்சாலைகள் ஆணை யாளர் நாயகம் தலைமையில் மற்றொரு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.





## சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கு

# ஐ.நா.மனித உரிமை அமைப்பு விருது வழங்கி மதிப்பளிப்பு!

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகளுக்கு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமைப்பால் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அருங்காட்சியகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசாபிமானி என்னும் விருதும், மனித உரிமைகளுக்கான மாகாண இயக்குநர் என்ற பதவி நிலையும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். இந்த விருது வழங்கும் நிகழ்வு நேற்று (21) காலை இடம்பெற்றது.







# கட்டுநாயக்க பொலிஸ் பிரிவில் ஹெரோயினுடன் ஒருவர் கைது!



கட்டுநாயக்க பொலிஸ் பிரிவின் ஆண்டியம்பலம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில், ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கைது நடவடிக்கை நேற்று சனிக்கிழமை (21) இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளத்தைச் சேர்ந்த 25 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 12 கிராம் 350 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# அணையா விளக்கு போராட்டத்தில் அனைவரும் பங்குபற்றுங்கள்!

## தமிழரசுக் கட்சியின் மட்டு. மாவட்ட எம்.பி. சிறிநேசன் கோரிக்கை



(வாலகிருஸ்ணா)

செம்மணிப் புதைகுழி சர்வதேச கண்காணிப்பின் கீழ் விசாரணை செய்யப்படவேண்டும், ஆய்வுசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கும் போராட்டத்துக்கு அனைவரும் இணைந்து வலுசேர்க்கவேண்டும்.தமிழ் தேசிய பற்றாளர்கள் மட்டுமல்லாமல் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பூரண ஆதரவு வழங்கவேண்டும். நீதிகோரி இளையோரால் நமக்காக முன்னெடுக்கப்படும் இந்த அணையா விளக்கு போராட்டத்தில் அனைவரையும் பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசனின் ஊடக சந்திப்பு மட்டக்களப்பு, செட்டிபாளையத்தில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலை நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு பொறிமுறையின் ஊடாகப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான விடயங்களோ, படுகொலை செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் தொடர்பான விடயங்களோ வெளியில் கொண்டு வரமுடியாத கையறு நிலையில் அரசுகள் காணப்படுகின்றன. இது தொடர்பான விசாரணைகள் சர்வதேச ரீதியில் நடைபெற்றால்தான் உண்மைகள் வெளியில் வரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்படும் மனித புதைகுழி அகழ்வின் போது 19 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. கண்டெடுக்கப்பட்டதில் மூன்று குழந்தைகளின் எலும்புக் கூடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. கடந்த சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான புதைகுழிகள் அமைக்கப்பட்டுள்ளனவோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்து 16 வருடங்களை கடந்துள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை என்பது தொடர்கதையாவுள்ளது. தமிழர்கள் வயது வேறுபாடுகள் இல்லாமல் கொல்லப்பட்டு புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும் போது இதனையே நாங்கள் இனப் படுகொலை என்கின்றோம்.

இதனடிப்படையில் தற்போது இளம் தலைமுறையைக் கொண்ட அமைப்பானது இந்த விடயத்தைச் சர்வதேசத்தின முன்னிலைக்கு கொண்டுவரவேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செம்மணி வளைவு உள்ள பகுதியில் நாளை 23 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்களுக்கு அணையாததீபம் என்ற கருப்பொருளில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இது மனித உரிமை மீறலோடு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாகும். இப்படியான பிரச்சினைகளுக்கு சர்வதேச ரீதியான ஒரு தீர்வைக் காண வேண்டும், சர்வதேச நீதி கிடைக்க வேண்டும், சர்வதேசத்தின் மேற்பார்வையின் கீழ் இந்தப் புதைகுழிகள் அகழப்படும்போதுதான் உண்மைகளை வெளிக்கொண்டுவர முடியும் என்ற அடிப்படையில் மக்கள் செயல் எனச் சொல்லப்படுகின்ற இளையோர் தன்னார்வ அமைப்பானது இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை உள்ளடக்கிய தமிழ் சமூகம், தமிழ் பேசும் சமூகம், பாதிக்கப்பட்டவர்கள் எமது தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள் ஆதரவாளர்கள் மற்றும் தமிழ் தேசியப் பற்றாளர்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் இந்த ஜனநாயக ரீதியான மனிதவுரிமைப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

அணையாத தீபம் என்ற இந்தப் போராட்டமானது எங்களுடைய விடுதலைத் தாகம் அணையாமல் இருந்து கொண்டிருக்கின்றது, மனிதவுரிமை சம்பந்தமான விடயங்களில் நீதி தேடுகின்ற விடயமும் அணையாது எங்களுடைய மனங்களில் இருக்கின்றது என்ற அடிப்படையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வோல்கர் டக்கர் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். பல தடுப்புகளுக்கு மத்தியில் அவர் இங்கு வரவிருக்கின்றார். அந்த வேளையில் இப்படியான மனிதவுரிமை மீறல்களுக்கு நீதி கிடைக்காத விடயங்கள் சம்பந்தமாக போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் இருக்கின்றபோது வடக்கு கிழக்கு என்றில்லாமல் பாதிக்கப்பட்ட உறவுகள், மக்கள் அனைவரும் இந்தப் போராட்டத்தில் உங்களுடைய பங்களிப்பை செய்ய வேண்டும். மனிதாபிமானம் மிக்கவர்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மொழி வேறுபாடில்லாமல் கலந்துகொள்ள வேண்டும்.

செம்மணியில் நடைபெறவுள்ள இந்த மூன்று தினங்கள் கவனவீர்ப்பு போராட்டம் சர்வதேசத்தின் மத்தியில் இந்த அநியாயங்களை கொண்டு செல்லும் போராட்டமாகும்.இந்தப் போராட்டத்துக்கு மக்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும், ஆதரவு கொடுக்க வேண்டும்.

கிருஷாந்தி என்ற பாடசாலை மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அந்த வேளையில் அது சம்பந்தமான விசாரணை நடைபெற்றபோது சோமரத்ன ராஜபக்ஷ என்ற கோப்ரல், அந்தப் படுகொலையோடு சம்பந்தப்பட்ட கொலையாளி எனக் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் விசாரணையின்போது குறிப்பிட்ட ஒரு விடயத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன். செம்மணிப் புதைகுழியில் பலநூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கின்றார்கள், அந்தக் கொலைகளை செய்த இராணுவ வீரர்கள் யார் என்பதையும் அவர் அந்த இடத்தில் குறிப்பிட்டிருந்தார். கப்டன் துடுக்கல என்ற பெயரையும் அவர் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான சாட்சியங்களை அவர்கள் அப்படியே மூடிமறைத்து விட்டார்கள்.

இந்த நிலையில் இப்போது மீண்டும் மண்ணை அகழும் போது எலும்புக் கூடுகள் வந்துகொண்டிருக்கின்றபடியால் இதற்கு உரிய சர்வதேச நீதி வேண்டும். சர்வதேச மேற்பார்வையில் இந்தப் புதைகுழிகள் அகழப்பட வேண்டும். இந்த முக்கியமான போராட்டத்துக்கு நாங்கள் அனைவரும் வலு சேர்க்க வேண்டும். பூரணமான உதவியை வழங்க வேண்டும். இளையோர் அமைப்பு நமக்காக செய்யும் இந்த அணையாத தீபம் என்ற போராட்டத்துக்கு நாங்கள் அனைவரும் அணையாமல், ஒதுங்காமல் பங்குகொள்ள வேண்டும்.- என்றார்.



# வளைகுடா போர்களில் தலையிடும் அமெரிக்காவின் வரலாற்று தவறுகள்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா.

(ஈரானின் அணுசக்தி திட்டத்தை முடக்கும் ஒரு முயற்சியின் ஒரு பகுதியாக அமெரிக்கா இந்தத் தாக்கு தலில் நேரடியாக இணைந்தது. இஸ்ரேல் ஒரு வாரத் துக்கும் மேலாக ஈரானின் வான் பாதுகாப்புகளையும், தாக்குதல் ஏவுகணை திறன்களையும் அழித்து வருகிறது. அணு செறிவூட்டல் வசதிகளை சேதப்படுத்தவும் தாக்குதல்களை நடத்தியுள்ளது).

வளைகுடா போர்களில் அமெரிக்காவின் வரலாற்று தவறுகள் இன்னமும் தொடர்ந்த நிலையில், ஈரான் மீதான தாக்குதல் இப்பிராந்தியத்தில் மேலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

### அணு கதிர் வீச்சுத் தாக்கம் அமெரிக்கா குண்டு வீச்சில்

ஈரானில் உள்ள மூன்று அணுசக்தி நிலையங்களை தாக்கியதாக டிரம்ப் கூறியுள்ளார். ஃபோர்டோவ், நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹானில் உள்ள ஈரானிய அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கப் படைகள் "மிகவும் வெற்றிகரமான" தாக்குதல்களை நடத்தியுள்ளது என்றும் அனைத்து அமெரிக்க விமானங்களும் இப்போது ஈரானிய வான்வெளியில் இல்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித் துள்ளார்.

இந்தத் தாக்குதலின் காரணமாக அணு ஆயுதக் கதிர்வீச்சின் தாக்கம் அதிகரிக்கலாம் என்றும் கூறப் படுகிறது.

ஆனாலும் ஈரானிய அரசு யுரேனியத்தை ஏற்கெனவே நகர்த்தி விட்டோம் என்றும் தெரிவித்துள்ளது. அமெரிக்க தாக்குதலால் எந்த பாதிப்புமில்லை என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானில் ஃபோர்டோ மீதான அமெரிக்க தாக்குத லுக்குப் பிறகு உள்ளூர்வாசிகள் பெரிய வெடிப்புக்கான எந்த அறிகுறிகளையும் உணரவில்லை என்று ஈரானின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான ஐ.ஆர்.என்.ஏ. கூறுகிறது. அந்தப் பகுதியில் நிலைமைகள் முற்றிலும் இயல்பானவை என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

### வளைகுடா போர்களில் அமெரிக்கா

அமெரிக்க தலையீடு 1991 வளைகுடா போரிலும் 2003 ஈராக் போரிலும் பாரிய பிராந்திய தாக்கத்தை உருவாக்கியது. குறிப்பாக இந்த போர்களில், அமெரிக்கா எடுத்த முடிவுகள் மற்றும் தலையீடுகள் காரணமாக பல விமர்சனங்கள் எழுந்தன. இந்த போர்களால் ஏற்பட்ட அரசியல், சமூக, மற்றும் பொருளாதார விளை வுகள் பற்றியும் இன்னமும் விவாதிக்கப்படுகிறது.

1991 இல் குவைத் மீதான ஈராக்கின் படையெடுப்பு ஆக்கிரமிப்பின் போது அமெரிக்காவின் தலையீடு உடனடியாக தேவைப்பட்டது. அமெரிக்கா பல மேற்குலக நாடுகளுடன் இணைந்து, ஈராக்கை குவைத்திலிருந்து வெளியேற்ற இராணுவ நடவடிக்கை எடுத்தது.

ஆனாலும் இந்தப் போரானது வளைகுடா பிராந்தியத் தில் அமெரிக்காவின் நீண்டகால தலையீட்டிற்கு வழி வகுத்தது. இந்தப் போரால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப் புகள் மற்றும் உயிரிழப்புகள் பற்றியும் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

### 2003 ஈராக்கில் போர்

ஈராக் வசம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அமெ ரிக்கா குற்றம் சாட்டியதுடன், 2003 இல் அமெரிக்கா நேரடியாக தலையீடு செய்தது.

அமெரிக்கா, நேச நாடுகளுடன் இணைந்து, ஈராக் மீது படையெடுத்து சதாம் உசேனை ஆட்சியில் இருந்து அகற்றியது.

இந்தப் போரின் போது, அமெரிக்கா கூறிய கார ணங்கள் தவறானவை என்று பின்னர் நிரூபிக்கப்பட்டன. இந்தப் போரால் ஈராக்கில் ஏற்பட்ட அரசியல் ஸ்திர மின்மை, உள்நாட்டுப் போர் மற்றும் பயங்கரவாதத்தின் எழுச்சி ஆகியவை விமர்சனத்துக்கு உள்ளாகின.

அமெரிக்கா, இந்தப் போர்களில் எடுத்த சில முடிவுகள், வளைகுடா பிராந்தியத்தில் ஒரு நிலையற்ற சூழ் நிலையை உருவாக்கியது. மேலும் இந்த பிராந்தியத்தில் அமெரிக்காவின் செல்வாக்கை குறைத்தது என்று பலர் கருதுகின்றனர். அமெரிக்கா, பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளின் உள் விவகாரங்களில் அளவுக்கு அதிகமாக தலையிட்டது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

### ஈரானுடன் நீண்ட பகைமை


1979 இல் உலகுக்கு பெரும் வியப்பை தந்த ஈரானின் இஸ்லாமிய புரட்சியின் போது, அமெரிக்க ஆதரவு அரசர் முகமது ரிசா சா பலவீ ஆட்சியில் இருந்து அகற் றப்பட்டார். இஸ்லாமிய குடியரசின் அயத்தோலா கோமெய்னி தலைமையில் இந்த புரட்சி நடைபெற்றது.

1979 ஜனவரி 16 அன்று தன் கடமைகளைப் பிரதமரிடம் ஒப்படைத்து விட்டு மன்னர் சா வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றார். அயத்தோலா கோமெய்னி அரசு அமைக்க தெஹ்ரான் திரும்பியபோது அவரைப் பல மில்லியன் ஈரானியர்கள் வரவேற்றனர்.

### ஈரான் பணயக் கைதிகள் நெருக்கடி

நவம்பர் 4, 1979 அன்று ஈரான் தலைநகர் தெஹ் ரானில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் அமெரிக்க

தொடர்ச்சி▼





# வளைகுடா போர்களில் தலையிடும் அமெரிக்காவின் வரலாற்று தவறுகள்!

**தொடர்ச்சி▲**

தூதரக ஊழியர்களும், பொது மக்களும் போராளிகளால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இது ஏறத்தாழ 444 நாள்கள் நீடித்தன. இதுவே அமெரிக்க – ஈரான் உறவுகளில் ஒரு பெரிய பிளவை ஏற்படுத்தியது. 1979 ஈரான் புரட்சிக்குப் பிறகு, அமெரிக்க ஆதரவு பெற்ற ஷா ஆட்சியை ஈரான் மக்கள் தூக்கியெறிந்து, அயதுல்லா கொமேனியின் தலைமையில் ஒரு இஸ்லாமிய அரசு நிறுவப்பட்டதன் பின்னர் அமெரிக்காவை எதிரியாகவே ஈரானிய மக்கள் பார்க்கிறார்கள்.

**அமெரிக்காவின் குண்டு வீச்சு**

ஈரானில் உள்ள அணுசக்தி நிலையங்களை அமெரிக்கா குண்டு வீசித் தாக்கி உள்ளது. ஃபோர்டோவ், நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹானில் உள்ள ஈரானிய அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

ஈரானின் ஃபோர்டோவ் தளத்தில் ஆறு பி-2 குண்டு வீச்சு விமானங்கள் பன்னிரண்டு ஜி.பி.யு.-57 பதுங்கு குழியை அழிக்கும் குண்டுகளை வீசியுள்ளன. கடற்படை நீர்மூழ்கிக் கப்பல்கள் நடான்ஸ் மற்றும் இஸ்பஹானில் முப்பது டோமாஹாக் ஏவுகணைகளை ஏவியுள்ளன. மேலும் நடான்ஸ் அணு நிலையம் மீது ஒர் பி-2 விமானம் இரண்டு டிரமெநச டிரளவநச குண்டுகளை வீசியுள்ளது.

இதேவேளை ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்கின்றன. இஸ்ரேலிய படைகள் இராணுவ வசதிகள் மற்றும் அணுசக்தி தளங்களை குறிவைக்கின்றன.

**ஈரானிடம் அணு ஆயுதம்?**

ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்குவதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பது தவறு என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். இதுகுறித்து டிரம்ப் தனது தேசிய புலனாய்வு இயக்குனர் துளசி கப்பார்டை பகிரங்கமாகக் கண்டித்துள்ளார்.

ஜூன் 13 அன்று இஸ்ரேல் தனது தாக்குதலைத் தொடங்கியதில் இருந்து ஈரானில் 400 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்று குறைந்தது 3,056 பேர் காயமடைந்தனர் என்றும் ஈரான் கூறுகிறது. இஸ்ரேலில், ஈரானிய தாக்குதல்களில் குறைந்தது 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈரானின் அணுசக்தித் திட்டத்தை முடக்கும் ஒரு முயற்சியின் ஒரு பகுதியாக அமெரிக்கா இந்தத் தாக்குதலில் நேரடியாக இணைந்தது. இஸ்ரேல் ஒரு வாரத்துக்கும் மேலாக ஈரானின் வான் பாதுகாப்புகளையும், தாக்குதல் ஏவுகணை திறன்களையும் அழித்து வருகிறது. அணுசெறிவூட்டல் வசதிகளை சேதப்படுத்தவும் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களை பெறுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என்று டிரம்ப் உறுதிபூண்டிருந்தார். இந்த தாக்குதலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, டிரம்ப் தனது முடிவை இரண்டு வாரங்களுக்குள் எடுப்பதாகக் கூறியிருந்தார். ஆனால் விரைவில் அதைச் செயல்படுத்தினார்.

இஸ்ரேலிய அதிகாரிகள், பலகுடியரசுக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் தூண்டுதலின் பேரில், இஸ்ரேலின் நடவடிக்கை மூலம் ஈரானின் அணுசக்தி திட்டத்தை நிரந்தரமாக தடை செய்ய டிரம்ப் கணக்கிட்டுள்ளார்.

ஈரானைத் தனது அணு அபிலாசைகளைக் கைவிட சம்மதிக்க வைக்க இரண்டு மாதங்களாக ஒரு இராஜதந்திர முயற்சியை மேற்கொண்டது. இதில் ஈரானியர்களுடன் உயர்மட்ட நேரடி பேச்சுகளும் அடங்கும். ஆனால் வெற்றியடையவில்லை.

தற்போது ஈரான் நாட்டின் மீதான போரானது வளைகுடா பிராந்தியத்தில் அமெரிக்காவின் நீண்டகால தலையீட்டுக்கு வழிவகுக்க தொடங்கியுள்ளது.



## விமான விபத்து எதிரொலி:

# 3 முக்கிய அதிகாரிகளை பதவி நீக்குமாறு ஏர் இந்தியாவுக்கு டி.ஜி.சி.ஏ. அறிவுறுத்தல்




அகமதாபாத் விமான விபத்துக்கான காரணம் குறித்து ஆய்வு நடத்தி வரும் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டி.ஜி.சி.ஏ), விமானக் குழுவினரை திட்டமிடுவது, இயக்குவது தொடர்பாக பல மீறல்கள் நிகழ்ந்துள்ளதாகக் கண்டறிந்துள்ளது.

இதற்குக் காரணமான 3 அதிகாரிகளை அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்குமாறு, ஏர் இந்தியாவுக்கு டி.ஜி.சி.ஏ. அறிவுறுத்தி உள்ளது.

கடந்த 12 ஆம் திகதி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்குப் புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர்.

விமான விபத்துக்கான காரணம் தொடர்பாக ஆய்வு செய்து வரும் டி.ஜி.சி.ஏ, ஏர் இந்தியாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளது. அதில், விமான செயல்பாட்டுத் துறையின் உயர் நிர்வாகப் பிரிவு உட்பட மூன்று அதிகாரிகளை அவர்களின் பொறுப்புகளில் இருந்து நீக்குமாறு உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த அதிகாரிகள் மீது தாமதமின்றி உள் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

“உரிமம், ஓய்வு, சமீபத்திய தேவைகளில் குறைபாடுகள் இருந்துள்ளன. இவை மட்டுமின்றி, விமானக் குழுவினரை திட்டமிடுவது, இயக்குவது ஆகியவற்றில் பல மீறல்கள் நிகழ்ந்துள்ளன.” என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானக் குழுவினர் தொடர்பான திட்டமிடலுக்கான மென்பொருள் கடந்த ஆண்டு மே மாதம் மாற்றப்பட்டது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என டி.ஜி.சி.ஏ. கோரிய முக்கிய அதிகாரிகளில் ஒருவர், ஒருங்கிணைந்த செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையத்தின் துணைத் தலைவர் ஆவார். ஒருங்கிணைந்த செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையம் என்பது ஒரு விமான நிறுவனத்தின் நரம்பு மண்டலம் போன்றதாகும். இது பாதுகாப்பான, திறமையான மற்றும் சட்டபூர்வமான முறையில் விமானங்கள் இயக்கப்படுவதை உறுதி செய்வதற்கானது. விமானிகள் மற்றும் கேபின் குழுவினர், அவர்களின் பட்டியல்கள் உட்பட ஒரு விமான நிறுவனத்தின் அனைத்து துறைகளும் இதன் கீழ் வருகிறது.

டி.ஜி.சி.ஏவின் இந்த உத்தரவை நிறைவேற்றி இருப்பதாக ஏர் இந்தியா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஏர் இந்தியா செய்தித் தொடர்பாளர் ஒருவர்,

“நாங்கள் ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவை ஒப்புக்கொள்கிறோம். உத்தரவை செயல்படுத்தியுள்ளோம். ஒருங்கிணைந்த செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையத்தை நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி நேரடியாக மேற்பார்வை இடுவார். பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் நிலையான நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவதை உறுதி செய்வதில் ஏர் இந்தியா உறுதிபூண்டுள்ளது.” என்று கூறியுள்ளார்.

பணியாளர்கள் அட்டவணையில் இனி மீறல்கள் நிகழுமானால், உரிமத்தை நிறுத்திவைப்பது, கட்டுப்பாடுகள் விதிப்பது உட்பட பல்வேறு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் டி.ஜி.சி.ஏ., ஏர் இந்தியாவை எச்சரித்துள்ளது.





# பிரதமர் மோடி முழக்கங்களில் நிபுணர் தீர்வுகளில் அல்ல என்கிறார் ராகுல் காந்தி

பிரதமர் நரேந்திர மோடி, முழக்கங்களைவழங்குவதில்நிபுணராக இருக்கின்றார் எனவும் ஆனால் தீர்வுகளில் அல்ல என்றும் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, இது தொடர்பாக காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார். மேலும், இந்தியாவில் தயாரிப்போம் என்ற மத்திய அரசின் முழக்கம், அதிக அளவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் என வாக்குறுதி அளிக்கப்பட்டதாகவும் ஆனால், நாட்டின் பொருளாதாரத்தில் உற்பத்தி 14 வீதமாக குறைந்துள்ளது என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பில் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“இந்தியாவில் தயாரிப்போம் திட்டம், அதிக அளவில் தொழிற்சாலைகள் பெருகும் என்பதற்கான உறுதியை அளித்தது. ஆனால், உற்பத்தி ஏன் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது, இளைஞர்களின் வேலையின்மை ஏன் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது, சீனாவிலிருந்து இறக்குமதிகள் ஏன் இரட்டிப்பாகியுள்ளன?

பிரதமர் மோடி முழக்கங்களை வழங்கும் கலையில் தேர்ச்சி பெற்றுள்ளார். ஆனால், தீர்வுகளை வழங்குவதில் அல்ல. 2014 முதல், உற்பத்தி நமது பொருளாதாரத்தில் 14 வீதமாக குறைந்துள்ளது.

திறமையான, அறிவார்ந்த, நம்பிக்கை அளிக்கக்கூடிய ஷிவாம், சைஃப் ஆகியோரை புதுடில்லியின் நேரு பிளேஸில் சந்தித்தேன். ஆனால், அவர்கள் தங்களின் (தொழில் தொடங்குவதற்கான) திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது.

உண்மை அப்பட்டமானது. அரசு இறக்குமதியில்தான் ஆர்வம் காட்டுகிறது. உள்நாட்டு நிறுவனங்கள் பெருகுவதில் அல்ல. இறுக்குமதி அதிகரிப்பால் சீனா லாபம் அடைகிறது.


புதிய யோசனைகள் எதுவும் இல்லாமல், மோடி சரணடைந்துவிட்டார். மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டமும் இப்போது அமைதியாக பின்வாங்கப்படுகிறது.

நேர்மையான சீர்திருத்தங்கள் மூலமும், நிதி உதவி அளிப்பதன் மூலமும் லட்சக்கணக்கான உற்பத்தியாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் அடிப்படை மாற்றமே இந்தியாவுக்குத் தேவை.

மற்றவர்களுக்கு ஒரு சந்தையாக இருப்பதை நாம் நிறுத்த வேண்டும். நாம் இங்கே நிறுவனங்களை உருவாக்கவில்லை என்றால், இறக்குமதி தொடரும். காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானுடன் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்திய அரசு ஒருபோதும் அமுல்படுத்தாது

## அமித் ஷா தெரிவிப்பு



பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ஒருபோதும் அமுல்படுத்தாது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுமா என்ற கேள்விக்கு பதில் அளித்த அமித் ஷா,

“இல்லை, அது ஒருபோதும் அமலபடுத்தப்படாது. ஒரு கால்வாய் அமைப்பதன் மூலம் பாகிஸ்தானுக்குப் பாயும் தண்ணீரை, ராஜஸ்தானுக்கு எடுத்துச் செல்வோம். நியாயமற்ற முறையில் தண்ணீரைப் பெற்று வந்த பாகிஸ்தான் தண்ணீரின்றி தவிக்கும்.” என்று தெரிவித்துள்ளார்.

சிந்து நதி நீரை இந்தியாவும், பாகிஸ்தானும் பகிர்ந்து கொள்வதை ஒழுங்குபடுத்தும் நோக்கில் இரு நாடுகளுக்கு இடையே கடந்த 1960 ஆம் ஆண்டு சிந்து நதி நீர் ஒப்பந்தம் கையெழுத்தானது. பரஸ்பர நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் அமலபடுத்தப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல்களை நடத்தி வந்தது. குறிப்பாக, கடந்த ஏப்ரல் 22 அன்று ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இந்தியா இந்த ஒப்பந்தத்தை நிறுத்தியது. எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு இந்தியாவை, பாகிஸ்தான் பல முறை வலியுறுத்தியது. பாகிஸ்தானின் நீர்வளத்துறை செயலாளர் சையத் அலி முர்தாசா, இந்தியாவின் ஜல் சக்தி அமைச்சகத்திற்கு இது தொடர்பாக 4 கடிதங்களை எழுதியுள்ளார். ஒப்பந்தத்தை இந்தியா மீறுகிறது என்றும், ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் கீழ் ஒருதலைப்பட்சமாக ரத்து செய்ய அனுமதி இல்லை என்றும் பாகிஸ்தான் கூறி வருகிறது.

எனினும், “பேச்சுவார்த்தைகளும் பயங்கரவாதமும் ஒன்றாகச் செல்ல முடியாது” என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது.

மேலும், பாகிஸ்தான் தனது எல்லைக்குள் பயங்கரவாதக் குழுக்களுக்கு நிதியளிப்பதை நிறுத்தும் வரை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப் போவதில்லை என்றும் இந்தியா உறுதியாகத் தெரிவித்துள்ளது.

# ஈரானின் 3 முக்கிய அணுசக்தி தளங்களை தாக்கியது அமெரிக்கா; ட்ரம்ப் அறிவிப்பு





ஈரானில் உள்ள மூன்று முதன்மை அணுசக்தி நிலையங்கள் மீது நாங்கள் வெற்றிகரமான தாக்குதலை நடத்தி முடித்துள்ளோம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் குறிப்பிடுகையில்,

“ஈரானில் உள்ள ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் உள்ளிட்ட மூன்று அணுசக்தி நிலையங்கள் மீது நாங்கள் மிகவும் வெற்றிகரமான தாக்குதலை நடத்தி முடித்துள்ளோம். இப்போது அனைத்து விமானங்களும் ஈரானின் வான்வெளிக்கு வெளியே உள்ளன. முதன்மை தளமான ஃபோர்டோவில் குண்டுகள் முழுமையாக வீசப்பட்டன.

அனைத்து விமானங்களும் பாதுகாப்பாக வீடு திரும்புகின்றன. எங்கள் சிறந்த அமெரிக்க வீரர்களுக்கு வாழ்த்துகள். உலகில் வேறு எந்த ராணுவமும் இதைச் செய்திருக்க முடியாது. இப்போது அமைதிக்கான நேரம். இந்த விஷயத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி” இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்களை நடத்த 2பி2 பாம்பர் ரக விமானங்கள் பயன்படுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா இந்த குண்டுகளை பயன்படுத்துவது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

முன்னதாக ஈரானின் இஸ்பஹான் அணு சக்தி தளம் மீது இஸ்ரேல் விமானப் படை நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் போர் விமானங்களின் தாக்குதலில் ஈரானின் 3 ராணுவ தளபதிகள் உயிரிழந்தனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேலின் டெல் அவிவ், ஹைபா, டான் உள்ளிட்ட நகரங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் நேற்று ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல், ஈரான் இடையே நேற்று 9-வது நாளாக போர் நீடித்தது. ஆரம்பம் முதலே ஈரானின் அணு சக்தி தளங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதன்படி நேற்று ஈரானின் இஸ்பஹான் அணு சக்தி தளத்தை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தின. இதில் அந்த அணு சக்தி தளம் மிகக் கடுமையாக சேதமடைந்தது என்று குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும்

## ஈரான் திட்டவட்டம்



ஈரானில் அமைந்துள்ள அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உறுதி செய்தார். இந்நிலையில், இது தொடர்பாக ஈரான் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தாக்குதலுக்கு ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்ஸி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், “ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராக உள்ள அமெரிக்கா, ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் ஐ.நா சாசனம், சர்வதேச சட்டம் மற்றும் அணுக்கரு பரவாமை ஒப்பந்தம் உள்ளிட்டவற்றை மீறியுள்ளது.

இந்த மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு கடும் விளைவுகள் ஏற்படும். ஐ.நா உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இந்த சட்டவிரோத மற்றும் குற்றவியல் நடத்தை மீறல் குறித்து விழிப்போடு இருக்க வேண்டும். ஐ.நா சாசனம் மற்றும் அதன் விதிகளின்படி, சுய பாதுகாப்பு சார்ந்து சட்டப்பூர்வமான பதிலடி மூலம் ஈரானின் இறையாண்மை மற்றும் மக்கள் பாதுகாக்கப்படுவார்கள்” என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஈரான் மீதான தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ட்ரம்ப் . “ஈரானின் அணுசக்தி நிலையங்களை அழிப்பதும், அரசு ஆதரவு பெற்ற பயங்கரவாத அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் தான் அமெரிக்காவின் முதல் நோக்கம். அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலில் ஈரானின் முக்கிய அணுசக்தி நிலையங்கள் அழிக்கப்பட்டன. ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் உள்ளிட்ட மூன்று அணுசக்தி நிலையங்கள் மீது நாங்கள் மிகவும் வெற்றிகரமான தாக்குதலை நடத்தி முடித்துள்ளோம்.

மத்திய கிழக்கு பகுதியின் கொடுங்கோல் நாடான ஈரான் இப்போது அமைதிக்கான உடன்பாட்டை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் அடுத்தடுத்த தாக்குதல் மிக பெரியதாகவும், மிக எளிதாகவும் இருக்கும் என எச்சரிக்கிறேன்.

கடந்த 40 ஆண்டுகளாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையில் ஈரான் பேசி வருகிறது. வெடி குண்டுகள் மூலம் நம் மக்களின் உயிரை அவர்கள் பறிக்கின்றனர். அப்படி லட்சக்கணக்கானவர்களை நாம் இழந்துள்ளோம். பல பேரை கொன்றவர் ஜெனரல் காசிம் சுலைமானி என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடரக் கூடாது என பல ஆண்டுகளுக்கு முன்பு நான் முடிவு செய்தேன்.

அதனால் தான் சொல்கிறேன் இனி இது தொடரக்கூடாது. ஒன்று ஈரானில் அமைதி ஏற்பட வேண்டும். அல்லது அங்கு மோசமான பாதிப்புகள் ஏற்படும். இந்த பாதிப்பின் தாக்கம் கடந்த 8 நாட்களாக ஈரான் சந்தித்து வரும் நிலையை காட்டிலும் மோசமாக இருக்கும். அங்கு தாக்குதல் நடத்துவதற்கான நமக்கு ஏராளமான இலக்குகள் உள்ளன. அமைதி ஏற்படவில்லை என்றால் அந்த இலக்குகளை துல்லியமாக, துரிதமாக, திறம்பட தாக்குவோம்.

இந்த நேரத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு அணியாக இணைந்து செயல்பட்டோம். இதற்கு முன்பு யாரும் இப்படி இணைந்து செயல்பட்டது கிடையாது. இஸ்ரேல் ராணுவத்துக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மாதிரியான வெற்றிகர ராணுவ நடவடிக்கையை உலகம் கண்டதில்லை. அதை செய்து காட்டிய அமெரிக்க படையினருக்கு வாழ்த்துகள். இது மாதிரியான ராணுவ நடவடிக்கையை உலகில் வேறு எந்த நாடும் மேற்கொண்டது இல்லை. அப்படியொரு தாக்குதலை நாம் நடத்தியுள்ளோம்.

நான் அனைவருக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன். கடவுளுக்கு நன்றி. கடவுளே நாங்கள் உங்களை நேசிக்கிறோம். எங்கள் மிகப்பெரிய ராணுவத்தை நேசிக்கிறோம். அவர்களை காக்கவும். கடவுள் மத்திய கிழக்கு, இஸ்ரேல், அமெரிக்காவை ஆசீர்வதிப்பார். நன்றி” என்றார்.





# ட்ரம்ப் நினைத்தால் ஒரு தொலைபேசி அழைப்பில் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியும்; ஈரான்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நினைத்தால், ஒரே ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நடந்து வரும் மோதலை நிறுத்த முடியும் என ஈரான் தெரிவித்துள்ளது.

தனியார் தொலைக்காட்சி ஒன்றிடம் பேசிய ஈரான் ஜனாதிபதியின் ஆலோசகர் மஜித் ஃபராஹானி,

“அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நினைத்தால் ஒரே ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் இஸ்ரேல் – ஈரான் போரை எளிதாக நிறுத்த முடியும். ஈரான் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் வரை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த பேச்சுவார்த்தையும் நடத்த முடியாது.

டொனால்ட் ட்ரம்ப் இஸ்ரேலின் வான் வழி குண்டுவீச்சுகளை நிறுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கை இராஜதந்திர பேச்சுவார்த்தைகளுக்கு வழி வகுக்கும்.” என்று கூறினார்.

ஐரோப்பிய வெளியுறவு அமைச்சர்களுடன் உயர் மட்ட பேச்சுவார்த்தைகளுக்காக ஜெனீவாவுக்கு பயணம் செய்துள்ள ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி, ‘இஸ்ரேல் முதலில் அதன் தாக்குதல்களை நிறுத்தாவிட்டால் அமெரிக்காவுடன் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைக்கு சாத்தியமில்லை’ என்று வலியுறுத்தினார்.

முன்னதாக, தாக்குதல்களை நிறுத்துமாறு இஸ்ரேலிடம் அமெரிக்கா தெரிவிக்க முடியும் என்றும் ஈரான் தெரிவித்துள்ள கருத்து குறித்து செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்த டொனால்ட் ட்ரம்ப்,

“இப்போது அந்த கோரிக்கையை வைப்பது மிகவும் கடினம் என்று நான் நினைக்கிறேன். ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களைப் பார்க்கும் போது நிறுத்துவது மிகவும் கடினம். இஸ்ரேல் சிறப்பாக போர் புரிகிறது. ஈரானின் செயல்பாடு குறைவாகவே உள்ளது என்று நீங்கள் கூறுவீர்கள் என்று நான் நினைக்கிறேன். யாரையாவது நிறுத்தச் சொல்வது கொஞ்சம் கடினம்.

ஒருவர் வெற்றிபெறக்கூடிய நிலையிலும், ஒருவர் தோற்கும் நிலையிலும் இருக்கும்போது போர் நிறுத்தம் என்பது சற்று கடினம். எனினும், போர் நிறுத்தம் ஏற்பட நாங்கள் தயாராகவும், விருப்பமாகவும் இருக்கிறோம். நாங்கள் ஈரானுடன் பேசி வருகிறோம், என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.” என்று தெரிவித்திருந்தார்.

# ஈரானின் அடுத்த உச்ச தலைவரை தெரிவு செய்துள்ளார் கமேனி



தான் கொல்லப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என்பதால், தனது பொறுப்பை வகிக்கப் போகும் தலைவரை ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி தேர்வு செய்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல்களை தொடங்கியதை அடுத்து, ஈரான் பதில் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால், இரு தரப்புக்கும் உயிரிழப்புகளும், சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியை இஸ்ரேல் குறிவைத்து வருகிறது.

“இஸ்ரேல் ராணுவத்துக்கு நாங்கள் இலக்குகளை வகுத்துக் கொடுத்துவிட்டோம். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி உயிருடன் இருக்கவே கூடாது” என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

பதுங்குக் குழியில் தஞ்சமடைந்துள்ள ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி, தனக்குப் பிறகு நாட்டை வழிநடத்தக்கூடிய 3 மதகுருமார்களின் பெயர்களை பட்டியலிட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும், இந்தப் பட்டியலில் அவரது மகன் மொஜ்தபா பெயர் இடம்பெறவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்தச் செய்தியை ‘தி நியூயோர்க் டைம்ஸ்’ வெளியிட்டுள்ளது. இஸ்ரேல் அல்லது அமெரிக்கா தன்னைக் கொல்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை அறிந்தே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என ஈரானிய அதிகாரிகள் கூறியதாக ‘தி நியூயோர்க் டைம்ஸ்’ தெரிவித்துள்ளது.

சாதாரண சூழ்நிலைகளில், ஒரு புதிய உச்ச தலைவரை நியமிக்கும் செயல்முறை பல மாதங்கள் ஆகலாம். இதில் தீவிரமான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும். பல வேட்பாளர்கள் கலந்துகொள்ள முடியும். ஆனால், நாடு இப்போது போரில் ஈடுபட்டுள்ள நிலையில், இஸ்லாமிய குடியரசு மற்றும் அவரது மரபு இரண்டையும் பாதுகாக்க விரைவான மாற்றத்தை உறுதி செய்ய கமேனி விரும்புவதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, மூன்று ஈரானிய தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. பாலஸ்தீன போராளிக் குழுவான ஹமாஸுடன் இராணுவ ஒருங்கிணைப்புக்குப் பொறுப்பான ஓர் உயர் ஈரானிய அதிகாரியையும், இரண்டு ஈரானிய தளபதிகளையும் ஒரே இரவில் கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் வெளியிட்டுள்ள மற்றொரு அறிவிப்பில்,

“தற்போது தென்மேற்கு ஈரானில் உள்ள இராணுவ உள்கட்டமைப்பை போர் விமானங்கள் தாக்குகின்றன” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இஸ்ரேல் தாக்குதல்களில் ஈரானில் இதுவரை 400 பேர் உயிரிழப்பு; 3,056 பேர் படுகாயம்

இஸ்ரேலின் தாக்குதல்களில் 400 இற்கும் மேற்பட்ட ஈரானியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 3,056 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் ஈரான்-ின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரானின் சுகாதார அமைச்சக மக்கள் தொடர்புத் தலைவர் ஹொசைன் கெர்மன்பூர், ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறித்த தகவல்களை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“9 ஆவது நாளாக தொடரும் தாக்குதல்களில் 54 பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 400 இற்கும் மேற்பட்ட ஈரானியர்கள் கொல்லப்பட்டனர். 3,056 பேர் காயமடைந்தனர். இந்த தாக்குதல்களில் காயமடைந்தவர்களில் பெரும்பாலோர் பொதுமக்கள் ஆவர்.

இஸ்ரேலின் தாக்குதல்களில் காயமடைந்தவர்களில், 2,220 பேர் சுகாதார அமைச்சக மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். அதே நேரத்தில் 232 பேர் தாக்குதல் நடந்த இடத்திலேயே வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்றனர். இந்தக் காலகட்டத்தில், நாடு முழுவதும் உள்ள எங்கள் மருத்துவக் குழுக்கள் காயமடைந்தவர்களுக்கு 457 அறுவை சிகிச்சைகளைச் செய்துள்ளன.” என்று தெரிவித்தார்.

ஈரானில் இணைய சேவை மீண்டும் கிடைக்க ஆரம்பித்துள்ளது. இஸ்ரேலின் சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் காரணம் காட்டி ஈரானில் வசிக்கும் 90 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு இந்த வாரத்தின் தொடக்கத்தில் தொலைபேசி மற்றும் ஆன்லைன் சேவைகள் துண்டிக்கப்பட்டன.

தற்போது இணைய சேவை ஓரளவு மீளத் தொடங்கியுள்ளதால், ஈரானியர்கள் சில நாட்களுக்குப் பிறகு தங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை தொடர்பு கொண்டு பேசும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.





பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 22/06/2025

## ஹெலிக்கொப்டர் விபத்து; நான்கு பேரை காணவில்லை

கனடாவின் க்யூபெக்கின் வட கிழக்கு பகுதியில் உள்ள நடாஷ் குவான் பகுதியில், மருத்துவ அவசர போக்குவரத்துக்காக பறந்த எயர் மெடிக் ஹெலிக்கொப்டர் ஒன்று வெள்ளிக்கிழமை இரவு 02



# ரொறன்ரோவில் கடும் வெப்பம்

ரொறன்ரோவில் கடுமையான வெப்பநிலை நிலவும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் சூழல் முகமை டொரொன்டோவில் வரவிருக்கும் மிகவும் ஆபத்தான வெப்ப அலை குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் வெப்ப நிலை 31°C முதல் 36°C வரை அடையலாம் என்றும் இரவிலும் அதிக வெப்பம் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02

# கனடாவின் பல பகுதிகளில் எரிபொருள் விலை உயர்வு



கனடாவின் பல பகுதிகளில் டீசலின் விலை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, நோவா ஸ்கோஷியா மாகாணத்தில் டீசல் விலை கடந்த ஏழு நாள்களில் மட்டும் லீட்டருக்கு 16 சதங்களினால் உயர்ந்துள்ளது.

இது நிலையான வருமானம் கொண்ட மக்கள் மற்றும் வணிக வாகன ஓட்டுநர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடா முழுவதும் டீசல் விலை உயர்ந்துள்ளதுடன், பெட்ரோல் விலையும் உயர்ந்து வருகிறது. குறிப்பாக, வடக்கு ஒன்டாரியோவில் லீட்டருக்கு 18 சதங்கள் என்ற அளவில் விலை உயர்வு பதிவாகியுள்ளது.

கடந்த வாரத்தில் தேசிய சராசரி விலை 5.7 சதங்கள் உயர்ந்துள்ளது.

ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே நடைபெறும் நிலையான மோதல் உலக எண்ணெய் சந்தையை குலைத்துள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.



# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் 3 வயது சிறுவன் உயிரிழப்பு

கனடாவின் நோவா ஸ்கோஷியாவின் பெட்ஃபோர்ட் பகுதியிலுள்ள ப்ரெஎன்ஸ்டோன் வேயில் வீதியை கடக்க முயன்ற 3 வயது சிறுவன், காரொன்றில் மோதி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7:50 மணியளவில் நடந்ததாக ஹலிபேக்ஸ் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவன் வீதியை கடந்தபோது வாகனமொன்று அவரை மோதியுள்ளது.

உடனே கிவைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டாலும், பலத்த காயங்கள் காரணமாக சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஹெலிக்கொப்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏரியில் விழுந்துள்ளது.

இந்த ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த நால்வர் காணாமல் போயுள்ளனர். விபத்து வெள்ளிக்கிழமை இரவு 10:30 மணியளவில் இடம்பெற்றதாக கனடாவின் போக்குவரத்து பாதுகாப்பு வாரிய பேச்சாளர் நிக் டெஃபால்கோ தெரிவித்துள்ளார்.

ஹெலிக்கொப்டர் ஒருவரை மருத்துவ அவசர நிலை காரணமாக ஏற்றிக்கொண்டு புறப்பட்டிருந்தபோது, புறப்பட்ட சில நிமிடங்களில் ஏரியில் விழுந்ததாக கனடாவின் போக்குவரத்து பாதுகாப்பு வாரிய கூறியுள்ளது.

ஹெலிக்கொப்டரில் நான்கு ஊழியர்களும், ஒரு பயணியும் இருந்தனர் என எயர் மெடிக் நிறுவனத்தின் பேச்சாளர் ரபாயல் போர்கால்ட் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளானவர்களில் ஒருவர் மீட்கப்பட்டு, உயிருக்கு ஆபத்தில்லை என கூறப்படும் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் ஏனைய நான்கு பேரைக் காணவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே பொலிஸாரும், தரை மற்றும் நீர்வழி தேடுதல் குழுக்களும் நால்வருக்கான தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

விபத்துக்கான காரணம் குறித்து க்யூபெக் மாகாண பொலிஸாரும், போக்குவரத்துச் சபையும் தனித்தனியாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




## ரொறன்றோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை திங்கள் கிழமை வெப்பநிலை 35 பாகை செல்சியஸ் வரையில் செல்லுமெனில், கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கே இது அதிகமான வெப்பநாளாக இருக்கும் என சூழலியல் நிபுணர் டேவிட் பிலிப்ஸ் தெரிவித்தார்.

வெப்பத்தால் பாதிக்கப்படும் மக்களை ஆதரிக்க நகரமெங்கும் 500க்கும் மேற்பட்ட குளிரூட்டும் இடங்களை திறப்பதாக டொரொன்டோ நகர மேயர் ஒலிவியா சோவ் அறிவித்தார்.

நகர மையங்கள், நூலகங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றில் குளிரூட்டும் இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ரெட்கிராஸுடன் இணைந்து முதியவர்கள் மற்றும் அத்தியாவசிய பிரிவுகளை நேரில் சென்று நலச் சோதனை செய்வதற்கான திட்டமும் தொடங்கப்படவுள்ளது என அவர் கூறியுள்ளார்.

மக்கள் அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும் எனவும், நேரடி வெயிலில் செல்ல வேண்டாம் எனவும் இலகுவான உடைகள் அணிய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கியூபெக் மாகாணத்தில் 3 வயது குழந்தை மாயம்

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுகிழமை 3 வயதுச் சிறுமி ஒருவர் காணாமல்போன சம்பவத்தில் அவரது தாய் சிறை செல்லும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, கியூபெக் மாகாணத்தில் வாழும் மூன்று வயதுச் சிறுமி ஒருவர் மாயமான நிலையில், பொலிஸார் அவரை தீவிரமாகத் தேடி வந்தார்கள்.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை மதியம் 2.00 மணியளவில், ட்ரோன் ஒன்று நெடுஞ்சாலை 417இன் ஓரமாக குழந்தை கிடப்பதைக் கண்டறிய உதவியது.

உடனடியாக பொலிஸார் அங்கு விரைய, அந்தக் குழந்தை நீரிழப்பினால் அவதியுற்றிருந்தது தெரியவந்தது.

காணாமல் போன அந்தக் குழந்தை பத்திரமாக மீட்கப்பட்டதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

அதே நேரத்தில், குழந்தையை கவனிக்காமல் விட்டதற்காக அதன் தாய் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாய் ஐந்து ஆண்டுகள் வரை சிறையில் செலவிட நேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவருக்கும் சில பிரச்சினைகள் இருப்பதாக அவரது சட்டத்தரணி கூறியுள்ள நிலையில், குழந்தையின் எதிர்காலம் கருதி, அவரது பெயரை வெளியிடவிடவும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.



